21. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மது (மொத்த விற்பனையில் வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 4-8-2008 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. 1964 ஆம் ஆண்டு இந்து சமய அறநிறுவனங்கள் (அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்) பணி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (அ.நி.4-2) துறையின் 16-6-2008 ஆம் நாளிட்ட 224 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண்1/2008)

2. 2008 ஆம் ஆண்டு சென்னை நகரக் காவல் (சென்னை நகரத்தின் புறநகர் பகுதிகளுக்கு நீட்டித்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2008)

3. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2008)

4. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2008)

5. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/2008)

6. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2008)

7. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2008)

8. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2008)

9. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின்கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2008)

10. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/2008)

11. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

12. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

13. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

14. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

15. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)